**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 15.09.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 3 (LW4)

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திகைசாமி | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( A2, A4, A5, A6 ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. A1, A3, A7 ஆஜர்)

<u>முதன்மை விசாரணை:</u>

நான் கீழக்காக்குளம் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலைகள் செய்து வருகிறேன். சாட்சி வளர்மதி என்பவரை எனக்குத் தெரியாது. சாட்சிகள் முத்தையா, முத்துராமு, முனியராஜ், முத்துப்பாண்டி கார்த்திக் ஆகியோரை தெரியாது. ஆஜர் எதிரிகளையும், இன்று ஆஜர் இல்லாத எதிரிகளையும் எனக்குத் தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன கருப்பையாவை எனக்குத்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.15 13:19:43 +0530

தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக நான் எதையும் பார்க்கவில்லை, எதையும் கேள்விப்படவில்லை போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய Sec.154 of Indian Evidence Act ன் படி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**</u>

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அப்போது எங்கள் ஊரை சேர்ந்த கருப்பையா என்பவர் புதியதாக வீடுகட்டிவருகிறார் என்றும், வீடுகட்டுவது சம்மந்தமாக கருப்பையாவும், அவரது நண்பர் தங்கபாண்டி என்பவரும் கடந்த 29.07.2021ம் தேதி மாலை வீரசோழன் கிராமத்திற்கு சென்று வீடு கட்டுவது சம்மந்தமாக கல்லை பார்த்துவிட்டு வந்து மேற்படி இருவரும் தங்கபாண்டியின் அண்ணன் கனிராஜசேகரிடம் ஜல்லிக்கு அட்வான்ஸ் கொடுப்பதற்காக கீழநரியன் கிராமத்திற்கு சென்றவர்கள் மீண்டும் வீட்டிற்கு வராததால் சாட்சி வளர்மதியும், அவரது மகள்களும் 30.07.2021ம் தேதி காலை 06.30 மணியளவில் கருப்பையாவை தேடி சென்ற போது, கீழநரியன் பஸ் ஸ்டாப் அருகே கருப்பையாவிற்கு சொந்தமான TN 65 BZ 5035 என்ற பதிவு எண் கொண்ட Hero Splender Plus பைக்கின் முன்பகுதி உடைந்து, இரத்தக்கறை படந்த நிலையில் கிடந்ததாகவும், அதனை பார்த்த சாட்சி வளர்மதி பஸ் ஸ்டாப் அருகே தேடி பார்த்த போது, கீழநரியன் பஸ் ஸ்டாப்பிற்கு கிழக்கு பக்கமாக எனது ஊரை சேர்ந்த கருப்பையா தலையிலும், உடலிலும் இரத்தக்காயங்களுடன் இறந்து கிடந்ததாக தகவல் தெரிந்து, நான் சாட்சிகள் முத்துராமு, முத்துப்பாண்டி, கார்த்தி, முத்தையா ஆகியோருடன் கருப்பையா கொலை செய்து கிடந்த இடத்திற்கு சென்று பார்த்தோம் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.15 13:19:46 +0530

சம்பவத்திற்கு 1 மாதத்திற்கு முன்பாக எனது ஊரை சேர்ந்த காளீஸ்வரி என்பவரை கீழநரியனை சேர்ந்த 1வது எதிரி ரமேஷ்குமார் கையை பிடித்து இழுத்ததாகவும், கருப்பையாவும் அவர் ஊரை சேர்ந்தவர்களும், ரமேஷ்குமாரை எங்கள் ஊரில் வைத்து, அடித்து கண்டித்து அனுப்பி வைத்தார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அந்த சம்பவத்திலிருந்து எதிரிகள் ரமேஷ்குமார், சுரேஷ்குமார், தமிழரசன், ராஜ்குமார், கார்த்திகைசாமி மற்றும் அவரது ஊரை சேர்ந்த எதிரிகள் சிலரும் கருப்பையாவையோ, அவரது எங்க ஊரை சேர்ந்த யாரையாவது கொலை செய்ய வேண்டும் என சுற்றி திரிவதாக எங்கள் கிராமத்தார்கள் மூலம் கேள்விப்பட்டோம் என்றால் சரியல்ல, அவ்வாறு நான் எதுவும் கேள்விப்படவில்லை. எதிரி ரமேஷ்குமாரும் அவரது நண்பர்களும் சேர்ந்து காளீஸ்வரி அண்ணன் பிரபுபாண்டியை கடந்த மாதம் அடித்துவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. மேலும் கருப்பையா பைக்கில் அடிக்கடி சென்றுவரும்போது, எதிரிகள் ரமேஷ்குமார், சுரேஷ்குமார், தமிழரசன், ராஜ்குமார், கார்த்திகைசாமி ஆகியோர்களும் அவரின் ஊரை சேர்ந்த சிலரும் கீழநரியன் பஸ் ஸ்டாப் மற்றும் ஊரணி படிக்கட்டில் மது அருந்தி கொண்டும், கஞ்சா புகைத்துக்கொண்டும் கருப்பையாவை முறைத்துப்பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்றும், அவர்களை பார்த்தாலே தனக்கு பயமாக இருப்பதாக கருப்பையா எங்கள் ஊரில் மற்றும் அவரது மனைவிடம் சொல்லிவந்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

இந்நிலையில் நானும் எங்கள் ஊரை சேர்ந்த முத்தையாவும், கமுதிக்கு போய்விட்டு எங்கள் ஊருக்கு திரும்ப வந்து கொண்டிருந்தபோது, சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் இரவு 08.30 மணியளவில் கீழநரியன் பஸ் ஸ்டாப்பில் வைத்து ரமேஷ்குமார், சுரேஷ்குமார், தமிழரசன், ராஜ்குமார், கார்த்திகைசாமி ஆகியோரும் அவரது ஊரை சேர்ந்த சிலபேரும் நின்று கொண்டிருப்பதை பார்த்தோம் என்றும், அவர்கள்தான் கொலை



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.15 13:19:49 +0530

செய்திருக்க வேண்டும் என நினைத்தோம் என்றால் சரியல்ல. எதிரிகள் எனது பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் என்பதால், அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** – இல்லை.

**மறு விசாரணை** – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.15 13:19:52 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .